<u>அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 600 006.</u>

<u>மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வு மார்ச் – 2024</u>

<u>உயிரி - விலங்கியல் விடைக்குறிப்புகள்</u>

<u>குறிப்பு:</u>

1. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.
2. படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.
3. கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுத வேண்டும்.

<u>மொத்த மதிப்பெண்கள் : 35</u>

பகுதி – 1


அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 8×1=8

| வகை A | | | வகை B | | | |
|---|---|---|---|---|---|---|
| வினா எண் | குறியீடு | விடை | வினா எண் | குறியீடு | விடை | மதிப்பெண் |
| 1. | அ | செர்டோலி செல்கள் | 1. | இ | கல்லீரல் | 1 |
| 2. | அ | உதவி பெறும் வாழ்க்கை | 2. | ஆ | உத்தரகாண்ட் | 1 |
| 3. | இ | மொழுக்கு ஈ | 3. | ஈ | ஹென்றி பாஸ்டியன் | 1 |
| 4. | ஈ | 21 | 4. | இ | மொழுக்கு ஈ | 1 |
| 5. | இ | கல்லீரல் | 5. | அ | செர்டோலி செல்கள் | 1 |
| 6. | ஈ | ஹென்றி பாஸ்டியன் | 6. | அ | உதவி பெறும் வாழ்க்கை | 1 |
| 7. | ஆ | உத்தரகாண்ட் | 7. | அ | SCID | 1 |
| 8. | அ | SCID | 8. | ஈ | 21 | 1 |

பகுதி – 2

எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும். 4×2=8

| வினா எண் | விடை | மதிப்பெண் | |
|---|---|---|---|
| 9 | மனித மரபணு திட்டத்தின் இலக்குகள்<br>• டி.என்.ஏ வில் உள்ள மரபணுக்களை (30,000) கண்டறிதல்.<br>• மனித டி.என்.ஏ வை உருவாக்கிய மூன்று பில்லியன் வேதி கார இணைகளின் வரிசையை தீர்மானித்தல்.<br>• தகவல்களை தரவு தளங்களில் சேமித்தல்.<br>• தரவுகளை ஆய்வு செய்வதற்கான கருவிகளை மேம்படுத்துதல்.<br>• தொடர்புடைய தொழில்நுட்பங்களை தொழிற்சாலைகள் போன்ற பிற துறைகளுக்கு இடமாற்றுதல்.<br>• இத்திட்டத்தில் எழும் அறம் சட்டம் மற்றும் சமூக இடர்பாடுகளைத் தெரிவித்தல்.<br>(ஏதேனும் 2 குறிப்புகள்) | 2×1 | 2 |

| | | | |
|---|---|---|---|
| 10 | குறுதிறன் எனப்படுவது மூலச் செல்கள் சில வகை செல்களாக மட்டுமே வேறுபாடடையும் திறனாகும்.<br>எடுத்துக்காட்டாக லிம்ஃபாய்டு அல்லது மயலாய்டு மூலச் செல்கள் B மற்றும் D செல்லாக மட்டும் வேறுபாடடையும். | 1<br>1 | 2 |
| 11 | மனித அண்ட செல் படம்<br><br>(ஏதேனும் இரண்டு பாகங்கள்) | படம்<br>1<br>பாகம்<br>1 | 2 |
| 12 | எத்தனால் அல்லது எத்தில் ஆல்கஹால் ($C_2H_5OH$).<br><br><u>காரணம்</u><br>எத்தில் ஆல்கஹால் தொழிற்சாலை மற்றும் ஆய்வகங்களில் எரிபொருளாகவும் பயன்படுகிறது. | 1<br>1 | 2 |
| 13 | • சமீர் என்பது ஒரு செயலி<br>• தேசிய அளவில் ஒவ்வொரு மணிக்கும் காற்றின் பண்புக் குறியீட்டை வெளியிடுகிறது. (AQI) | 1<br>1 | 2 |
| 14 | கருப்பை வாய்ப் புற்றுநோயை உருவாக்கும் காரணிகள்<br>• பலருடன் பாலியல் தொடர்பு<br>• கருத்தடை மாத்திரைகளை நீண்ட நாட்களாகப் பயன்படுத்துதல். | 1<br>1 | 2 |

## பகுதி – 3

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். வினா எண் 19 –க்கு கட்டாயமாக விடையளிக்கவும். 3×3=9

| வினா எண் | விடை | மதிப்பெண் | |
|---|---|---|---|
| 15 | <u>கோப்ரோலைட்டுகள்</u><br><br>• விலங்குகளின் கடினமாக்கப்பட்ட மலப் பொருட்கள் கோப்ரோலைட்டுகள் எனும் சிறு உருண்டைகளாக காணப்படுகின்றன.<br>• கோப்ரோலைட்டுகளை ஆய்வு செய்வதால் வரலாற்றுக்கு முந்தைய காலத்தில் வாழ்ந்த விலங்குகளின் உணவுப் பழக்கத்தினை அறிந்து கொள்ளலாம். | 2<br>1 | 3 |

| | | | |
|---|---|---|---|
| 16 | ஹார்மோன்களை உற்பத்தி செய்வதால்<br>• மனித கோரியானிக் கொனடோடிரோபின் (hcG)<br>• மனித கோரியானிக் சொமட்டோமாம்மோடிரோபின் (hcs)<br>(அல்லது)<br>மனித பிளாசன்டல் லாக்டோஜென் (hpl)<br>• ஈஸ்ட்ரோஜன்<br>• புரோஜெஸ்டிரான்<br>• ரிலாக்சின்<br>(ஏதேனும் இரண்டு) | 1<br>2 | 3 |
| 17 | • மறுசுழற்சி செய்தல் அல்லது மீண்டும் பயன்படுத்துதல் அல்லது மீண்டும் விற்பனை செய்தல் அல்லது அழிவு மீட்பு செய்தல்.<br>• நிலக்குவிப்புகள் மற்றும் எரியூட்டி சாம்பல்களிலிருந்து கசியும் கன உலோகங்கள் போன்ற பொருட்கள் ஆகியவற்றை தவிர்க்க உயரளவு பாதுகாப்பினை மேற்கொள்ள வேண்டும்.<br>(பொருத்தமான குறிப்புகளுக்கும் மதிப்பெண் வழங்கலாம்) | 1<br>2 | 3 |
| 18 | r தேர்வு செய்த சிற்றினங்கள் / k தேர்வு செய்த சிற்றினங்கள் (see table below)<br>(ஏதேனும் மூன்று) | 3×1 | 3 |
| 19 | பின்னோக்கிய படியெடுத்தல் PCR அல்லது RT-PCR<br>ரிவர்ஸ் டிரான்ஸ்கிரிப்டேஸ் எனும் நொதியைப் பயன்படுத்தி ஆர்.என்.ஏ மூலக்கூறுகள் (mRNA) நிரப்பு டி.என்.ஏ க்களாக மாற்றப்படுகின்றன. உருவான cDNA வானது PCRக்கு வார்ப்புரு டி.என்.ஏ வாகப் பணிபுரிகிறது. | 1<br>2 | 3 |

| r தேர்வு செய்த சிற்றினங்கள் | k தேர்வு செய்த சிற்றினங்கள் |
|---|---|
| • சிறிய அளவிலான உயிரினங்கள். | • பெரிய அளவிலான உயிரினங்கள். |
| • அதிக சேய் உயிரிகளை உருவாக்கும் . | • குறைவான சேய் உயிரிகளை உருவாக்கும். |
| • வேகமாக முதிர்ச்சியடையும். | • தாமதமான முதிர்ச்சியடையும். |
| • ஆயுட்காலம் குறைவு. | • ஆயுட்காலம் அதிகம். |
| • வாழ்நாளில் ஒருமுறையோ அல்லது சில முறைகளோ மட்டுமே இனப்பெருக்கம் செய்யும். | • தன் வாழ்நாளில் ஒன்றுக்கும் மேற்பட்ட முறை இனப்பெருக்கம் செய்யும். |
| • ஒரு சில உயிரினங்கள் மட்டுமே முதிர்வயதை எட்டும். | • பெரும்பாலான உயிரினங்கள் அதிக வாழ்நாளை எட்டும். |
| • சுற்றுச் சூழல் நிலையற்றது, அடர்த்தி சாராதது. | • சுற்றுச் சூழல் நிலையானது அடர்த்தி சார்ந்தது. |

பகுதி – 4

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 2×5=10

| வினா எண் | விடை | மதிப்பெண் | |
|---|---|---|---|
| 20 (அ) | • அபாயத்திலுள்ள அனைத்து சிற்றினங்களையும் அடையாளம் கண்டு பாதுகாத்தல்.<br>• பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த உயிரிகளை பாதுகாக்கப்பட்ட பகுதியில் பாதுகாத்தல்.<br>• உணவு, இனப்பெருக்கம், பேணிவளர்த்தல், ஓய்விடம் ஆகியவற்றுக்கான வாழ்விடங்களில் மிக ஆபத்தான நிலையில் இருப்பவைகளை அடையாளம் கண்டு பாதுகாத்தல்.<br>• நிலம், நீர் மற்றும் காற்று முதலியவற்றை முன்னுரிமை அடிப்படையில் பாதுகாத்தல்.<br>• வன உயினிங்களின் பாதுகாப்புச் சட்டம் அமல்படுத்தப்படுதல்.<br>• பாதுகாப்பு உத்திகளில் – சூழல் உள்பாதுகாப்பு மற்றும் சூழல் வெளி பாதுகாப்பு ஆகிய இரண்டு முக்கிய அம்சங்களை செயல்படுத்துதல்.<br>(ஏதேனும் ஐந்து)<br>(பொருத்தமான குறிப்புகளுக்கும் மதிப்பெண் வழங்கலாம்) | 5×1 | 5 |
| (அல்லது) | | | |
| 20 (ஆ) | ஹார்டி வீன்பெர்க் விதியின் ஊகங்கள்<br>• <u>திடீர் மாற்றம் இன்மை</u><br>திடீர் மாற்றத்தின் காரணமாக புதிய அல்லீல் உருவாக்கம், மரபணு இரட்டிப்படைதல் அல்லது மரபணு நீக்கம் ஆகிய எதுவும் இல்லை.<br>• <u>சீரற்ற இனச்சேர்க்கை</u><br>ஒவ்வொரு உயிரினமும் இனச்சேர்க்கையில் ஈடுபடுவதற்கான வாய்ப்பைப் பெறுகின்றன.<br>• <u>மரபணு ஓட்டம் இன்மை</u><br>இனக்கூட்டத்திலிருந்து தனிப்பட்ட உயிரினங்களோ அல்லது அவற்றின் இனச்செல்களோ உள்ளேற்றம் அல்லது வெளியேற்றம் எதிலும் ஈடுபடுவது இல்லை.<br>• <u>மிகப் பெரிய உயிரினத் தொகை</u><br>இனக்கூட்டத்தின் அளவு எல்லையற்றதாக இருக்க வேண்டும்.<br>• <u>இயற்கைத் தேர்வு இன்மை</u><br>அனைத்து அல்லீல்களும் வாழவும் இனப்பெருக்கம் செய்யவும் தகுதியுடையவை. | 1<br>1<br>1<br>1<br>1 | 5 |

| 21 (அ) | போதை மருந்து வகைகள் | | | | |
|---|---|---|---|---|---|
| | தொகுதி குழு | போதை மருந்துகள் | விளைவுகள் | | |
| | • கிளர்வூட்டிகள் | ஆம்ஃபிடமைன்கள், கோகைன், நிக்கோடின், புகையிலை (ஏதேனும் ஒன்று) | மூளையின் செயல்பாட்டைத் துரிதப்படுத்துகின்றன. | 1 | |
| | • மன அழுத்தவூக்கிகள் | மது பார்பிட்டுரேட்டுகள், அமைதியூக்கிகள் (ஏதேனும் ஒன்று) | மூளையின் செயல்பாட்டைக் குறைக்கின்றன. | 1 | |
| | • போதை மருந்து வலி நிவாரணிகள் | அபின், மார்ஃபின் (ஏதேனும் ஒன்று) | மத்திய நரம்பு மண்டலத்தின் மீது மன அழுத்த வூக்கியாக செயல்புரிகிறது. | 1 | 5 |
| | • மன மருட்சி மருந்துகள் | லைசர்ஜிக் அமில டை எத்தில் அமைடு (LSD) ஃபென்சைக்ளிடைன் (ஏதேனும் ஒன்று) | ஒருவரின் பார்த்தல், கேட்டல் மற்றும் உணர்தல் வழியை சிதைக்கிறது. | 1 | |
| | • கிளர்வூட்டிகள், மன அழுத்த வூக்கிகள் மன மருட்சி மருந்துகள் | மரிஜுவானா, கஞ்சா, சாரஸ் (ஏதேனும் ஒன்று) | மத்திய நரம்பு மண்டலத்தின் மீது மன அழுத்தவூக்கியாகவும் மற்றும் இரத்த ஓட்ட மண்டலத்தையும் பாதிக்கின்றன. | 1 | |

(அல்லது)

| | | | |
|---|---|---|---|
| 21<br>(ஆ) | உயிரிகளில் காணப்படும் பல்வேறு வகையான ஒருங்கிணைவு முறைகள்<br>• <u>சுய கருவுருதல்</u><br>ஒரு செல்லிலிருந்தோ அல்லது ஒரே உயிரியிலிருந்தோ உருவாகின்ற ஆண் மற்றும் பெண் இன செல்கள் இணைந்து கருமுட்டையை உருவாக்குகின்றன.<br>• <u>அயல் கருவுறுதல்</u><br>ஆண் மற்றும் பெண் என்னும் இரு தனித்தனி பெற்றோர்களிலிருந்து உருவாகின்ற இனச் செல்கள் ஒன்றிணைந்து கருமுட்டை உருவாகிறது.<br>• <u>முழு சேர்க்கை</u><br>முதிர்ந்த உயிரிகள் இனச்செல்களை உருவாக்காமல் அவ்வுயிரிகளே இனச் செல்கள் போன்று செயல்பட்டு புதிய உயிரிகளைத் தோற்றுவிக்கின்றன.<br>• <u>இளம் செல் சேர்க்கை</u><br>முதிர்ந்த பெற்றோர் செல்லிலிருந்து மறைமுகப்பிரிவு மூலம் உருவாகும் இரு இளம் சேய் செல்கள் இனச்செல்கள் போன்று செயல்பட்டு ஒன்றிணைந்து புதிய உயிரியைத் தோற்றுவிக்கும்.<br>• <u>மாறுபட்ட செல் சேர்க்கை</u><br>அமைப்பில் மாறுபட்ட இரு சிறிய இனச்செல்கள் ஒன்றிணையும் முறை<br>• <u>ஒத்த செல் சேர்க்கை</u><br>அமைப்பில் ஒரே மாதிரியான இரு இனச்செல்கள் ஒன்றிணைதல்.<br>• <u>வேறுபட்ட செல் சேர்க்கை</u><br>வேறுபட்ட இரு இனச் செல்கள் ஒன்றிணையும் முறை.<br>(ஏதேனும் ஐந்து)<br>(ஒவ்வொரு தலைப்பிற்கும் ½ மதிப்பெண் & விளக்கத்திற்கு ½ மதிப்பெண்) | | 5 |